

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 18-02-2025


# பிளாக்மெயில் கவர்மெண்ட்

**பேசும் இடம் காசி தமிழ்ச் சங்கமம். ஆனால் செய்யும் செயல், தமிழின் கழுத்தை நெரிக்கும் செயல். காசி தமிழ்ச் சங்கமத்தில் வைத்து தமிழை மொத்தமாகக் கை கழுவி விடப் பார்க்கிறார் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான். ஒரு தொகுதியில் வெற்றி பெற்று, உதவாக்கரைக் கூட்டத்தில் ஒரு மந்திரி ஆகிவிட்டால் தன்னை ஏதோ மன்னரைப் போல நினைத்துக் கொள்கிறாரா தர்மேந்திர பிரதான்?**

"மும்மொழிக் கொள்கையை பிற மாநிலங்கள் ஏற்கும் போது தமிழ்நாடு ஏற்க மறுப்பது ஏன்?" என்று கேள்வி எழுப்பிய தர்மேந்திர பிரதான், "தமிழ் நாட்டுக்கு நிதி நிலுவையில் இருப்பது எனக்குத் தெரியும். ஆனால் புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு ஏற்றுக் கொண்டால்தான் நிதி விடுவிக்கப்படும். மும்மொழிக் கொள்கையை ஏற்காவிட்டால் நிதி ஒதுக்கச் சட்டத்தில் இடமில்லை" என்று ஆணவமாகச் சொல்லி இருக்கிறார் தர்மேந்திரப் பிரதான்.

'நீட்' என்ற ஒரு தேர்வை சர்ச்சை இல்லாமல் நடத்த முடியாத தர்மேந்திர பிரதான் எல்லாம் இந்த நாட்டில் கல்வி அமைச்சராக இருப்பது இந்த நாட்டுக்கு அவமானம் இல்லையா? 'நீட்' தேர்வில் அதிகப்படியான முறைகேடுகள் நடைபெற்றது இவரது காலத்தில்தான் என்பதுதான் இவருக்கு உள்ள 'பெருமை' ஆகும்.

நாடாளுமன்றத்தில் பேசும் போது, 'நீட் தேர்வில் எந்த தவறும் நடைபெறவில்லை' என்று முதலில் சொன்னார். பின்னர், 'தவறு நடந்திருந்தால் நடவடிக்கை எடுப்பேன்' என்று சொன்னார். உச்சநீதிமன்றத்திலேயே மாற்றி மாற்றிச் சொன்னார். இவர்தான் இன்று தமிழ்நாட்டை மிரட்டுகிறார். இதுதான் காலத்தின் கோலம் என்பது.

மும்மொழிக் கொள்கையை ஏற்காவிட்டால் நிதி ஒதுக்கச் சட்டத்தில் இடமில்லை என்று எந்த சட்டத்தில் இருக்கிறது? இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இருக்கிறதா? அந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் எப்போது நிறைவேற்றப்பட்டது? என்பதைச் சொல்வாரா அமைச்சர்?

**"மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாட்டுக்கு நிதி கிடையாது என்று பிளாக்மெயில் செய்யும் தடித்தனத்தை தமிழர்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். எங்கள் உரிமையைத்தான் கேட்கிறோம். உங்கள் தனிச்சொத்தைக் கேட்பது போலத் திமிராகப் பேசினால், தமிழர்களின் தனிக் குணத்தையும் டெல்லி பார்க்க வேண்டி இருக்கும்"** என்று எச்சரித்துள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ஒன்றிய அமைச்சரின் மிரட்டலைக் கண்டித்து தமிழ்நாட்டில் இருக்கும் 'இந்தியா' கூட்டணிக் கட்சிகள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு 2,152 கோடி ரூபாயை ஒன்றிய அரசு தர வேண்டும். தேசியக் கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்காததால் இந்த நிதி கிடையாது என்று சொல்கிறார்கள். இவர்கள் கொண்டு வரும் தேசியக் கல்விக் கொள்கைகளுக்கான இலக்கை தமிழ்நாடு எப்போதோ எட்டி விட்டது. தமிழ்நாட்டின் கல்விக் கொள்கையைத்தான் ஒன்றிய அரசு பின்பற்ற வேண்டுமே தவிர, நாம் அவர்களிடம் இருந்து பின்பற்றுவதற்கு என்ன இருக்கிறது?

பயிற்று மொழிக் கொள்கையாக தமிழ்நாடு பின்பற்றுவது தமிழ்நாடு அரசின் சட்டத்தைத்தானே தவிர, வேறல்ல. இருமொழிக் கொள்கை என்பது தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம். தமிழும், ஆங்கிலமும்தான் நமது இருமொழிக் கொள்கை என்றும் இந்திக்கு இடமில்லை என்பதுதான் அந்தச் சட்டம்.

சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தை 1968 சனவரி 23 அன்று முதல்வர் அண்ணா கூட்டினார். அதில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் படி, **"தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும், மும்மொழித் திட்டத்தை அகற்றி விட்டு, தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து, இந்தி மொழியை அறவே நீக்கி விட இப்பேரவை தீர்மானிக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தில் இந்திக்கு தரப்பட்டுள்ள சிறப்பு நிலை நீக்கப்பட வேண்டும் என்றும்; இந்தியாவின் அனைத்து தேசிய மொழிகளுக்கும் சமநிலை வழங்கும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் பிற மொழிகளுக்குக் குறைவான நிலை தரப்பட்டுள்ளப் பிரிவுகளைத் திருத்த வேண்டும் என்றும் இப்பேரவை வலியுறுத்துகிறது"** என்று சொல்லப்பட்டது.

தாய்மொழியாகிய தமிழ், உலகத்துக்கான இணைப்பு மொழியாக ஆங்கிலம் என இரு மொழிக் கொள்கை மட்டுமே தமிழ்நாட்டில் வழக்கத்தில் இருந்து வருகிறது. 2006ஆம் ஆண்டின் தமிழ்நாடு (தமிழ் மொழி கற்கும்) சட்டத்தின்படி ஒவ்வொரு மாணவரும், பத்தாம் வகுப்பு வரை தமிழ் மொழியை கட்டாயப் பாடமாக கற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனினும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது என தமிழை தாய் மொழியாகக் கொள்ளாத மாணவர்களும் தமிழ் மொழியுடன் சேர்த்து அவர்தம் தாய் மொழியையும் விருப்பப் பாடமாக படித்து தேர்வு எழுதும் முறை பல ஆண்டுகளாக இருந்து வருகிறது.

இதில் என்ன குறையைக் கண்டார் தர்மேந்திர பிரதான்? அவர் சொல்வதைப் போல இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் மும்மொழிக் கொள்கை செயல்பாட்டில் இல்லை. இந்தி பேசும் பல மாநிலங்களில் ஆங்கிலம் கற்றுத் தரப்படுவது இல்லை. ஆங்கில வகுப்புகளை நடத்துவது இல்லை. இது இந்தியாவின் கல்வி அமைச்சர் அறிவாரா?

எல்லாவற்றையும் கொண்டு வந்து தமிழ்நாட்டில் மட்டும் ஏன் கொட்ட வேண்டும்? எல்லாவற்றையும் கொண்டு வந்து தமிழ்நாட்டின் மீது ஏன் திணிக்க வேண்டும்? எல்லாப் படையெடுப்புகளையும் தமிழ்நாடு தடுக்கும்.

**அரசியல் ரீதியாக தி.மு.க. - பா.ஜ.க.வுக்கான மோதல் அல்ல இது. தமிழர் பண்பாட்டின் மீது பா.ஜ.க. தனது பாசிசப் போரைத் தொடங்கி இருக்கிறது. நாம் ஜனநாயகப் போர்க்களத்தில் இதுவரை வென்றதைப் போலவே வெல்வோம்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.2.2025) சென்னையில் நடைபெற்ற, நாகப்பட்டினம் காவல் கண்காணிப்பாளர் ஆ.கு.அருண் கபிலன் – பிரியங்கா முருகேஷ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### பதிவுத்துறை சார்பில்

# சேலம், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சார் பதிவாளர் அலுவலகங்கள்!

## சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப். 18 -**

**பதிவுத் துறை சார்பில் புதியதாக உருவாக்கப்பட்ட காடையாம்பட்டி மற்றும் பாகலூர் சார் பதிவாளர் அலுவலகங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.2.2025) தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில் சேலம் பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட காடையாம்பட்டி சார் பதிவாளர் அலுவலகம் மற்றும் கிருஷ்ணகிரி பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட பாகலூர் சார் பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

பதிவுத்துறை வாயிலாக மக்கள் தங்கள் சொத்துக்களின் மீதான உரிமையை தமது பெயரில் பதிவு செய்தல், திருமணத்தைப் பதிவு செய்தல், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனம் போன்ற குழுவாகக் கூடி செயல்படும் நடவடிக்கைகளைப் பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பதிவுத்துறை செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் புதிய சார் பதிவாளர் அலுவலகங்களை கட்டுதல், காலிப்பணியிடங்களை நிரப்புதல், புதிய சார்பதிவாளர் அலுவலகங்களை ஏற்படுத்துதல், துறையின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

**சேலம் பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட காடையாம்பட்டி சார் பதிவாளர் அலுவலகம்**

"உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தில், துறைவாரியான பணிகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்டதன் அடிப்படையில், சேலம் வருவாய் மாவட்டம், காடையாம்பட்டி வட்டத்தில் அமையும் சேலம் (மேற்கு) பதிவு மாவட்டம் ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 20 கிராமங்கள், மேச்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 4 கிராமங்கள் மற்றும் தருமபுரி பதிவு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 2 கிராமங்கள் ஆகியவற்றினை அச்சார்பதிவாளர் அலுவலகங்களிலிருந்து பிரித்து மொத்தம் 26 கிராமங்களை உள்ளடக்கி சேலம் (மேற்கு) பதிவு மாவட்டத்தில் புதியதாக காடையாம்பட்டி சார் பதிவாளர் அலுவலகம் உருவாக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.

புதியதாக உருவாக்கப்பட்ட காடையாம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் சராசரியாக ஆண்டொன்றிற்கு 4978 ஆவணங்கள் பதிவாகி சுமார் 10 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கிருஷ்ணகிரி பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட பாகலூர் சார் பதிவாளர் அலுவலகம்**

2024-2025ஆம் ஆண்டிற்கான பதிவுத்துறை மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், கிருஷ்ணகிரி வருவாய் மாவட்டம், ஒசூர் மற்றும் சூளகிரி வருவாய் வட்டங்களில் அமையும் கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், ஒசூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 52 கிராமங்கள் மற்றும் சூளகிரி சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 15 கிராமங்கள் ஆகியவற்றினை அச்சார்பதிவாளர் அலுவலகங்களிலிருந்து பிரித்து மொத்தம் 67 கிராமங்களை உள்ளடக்கி கிருஷ்ணகிரி பதிவு மாவட்டத்தில் புதியதாக பாகலூர் சார்பதிவாளர் அலுவலகம் உருவாக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

புதியதாக உருவாக்கப்பட்ட பாகலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் சராசரியாக ஆண்டொன்றிற்கு 8100 ஆவணங்கள் பதிவாகி சுமார் 54 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்புதிய சார் பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படுவதன் மூலம் பொதுமக்களுக்கு விரைவான மற்றும் சிறப்பான சேவைகளை அளிக்க இயலும்.

இந்த நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கும் பணி!

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு – கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தனர்!

*மானாமதுரை, பிப். 18 -*

*கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கும் பணியை அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தனர்.*

*சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்மையில் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.*

*தற்போது இதற்கான பணிகள் தொடக்க விழா, அருங்காட்சியகம் அமைக்க நிலம் வழங்கிய உரிமையாளர்களுக்கு ரூ.7.44 கோடிக்கு ஆணைகள் வழங்கும் விழா ஆகியவை ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. இதற்கு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமை வகித்தார். மானாமதுரை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் முன்னிலை வகித்தார்.*

*விழாவில் நிதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர் பங்கேற்று திறந்தவெளி அருங்காட்சியம் அமைக்கும் பணியைத் தொடங்கி வைத்தனர். மேலும், நில உரிமையாளர்களுக்கு ரூ.7.44 கோடிக்கான ஆணைகளையும் வழங்கினர்.*

*இதைத் தொடர்ந்து, கீழடி அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டிருந்த பூம்புகார் கைவினைப் பொருள்கள் விற்பனையகத்தில் விற்பனையைத் தொடங்கி வைத்தனர்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர்கள் கூறியதாவது: -*

*சிந்து சமவெளி நாகரிகக் கால கட்டத்தில் தமிழர்கள் பண்பாடு கலாசாரத்துடன், வாழ்ந்ததற்கான அடையாளம் இந்த ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் உலக வரலாற்றில் 2,600 ஆண்டுகளுக்கு முன்னரே பண்பாடு, கலாச்சாரத்துடன் வாழ்ந்த பெருமை தமிழர்களுக்கு இருந்ததாக கூறப்பட்டுள்ளது.*

*மேலும் நமது முன்னோர்கள் நாகரிக ஆபரணங்களை பயன்படுத்தியது, எழுத்துச் சுவடிகள், தற்காப்புக்காக பயன்படுத்திய ஆயுதங்கள், கட்டுமானப் பொருள்கள் என பல்வேறு பொருள்கள் இதுவரை நடைபெற்ற ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்பட்டன.*

*தமிழகத்தில் தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புகள் கிடைக்கும் இடங்களைக் கண்டறிந்து, ஆராய்ச்சிப் பணிகளை செயல்படுத்தி முன்னோர்களின் கலாச் சாரத்தையும், பண்பாட்டையும் இளம் தலைமுறையினர் தெரிந்து கொள்ளும் வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். கீழடி ஆராய்ச்சி என்பது இந்த மண்ணுக்கு கிடைத்த பெருமை. கீழடி, மணலூர், கொந்தகை, அகரம் ஆகிய பகுதிகளில் தொல்லியல் துறையின் மூலம் இதுவரை 9 கட்ட அகழாய்வு ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.*

*தற்போது 10 ஆம் கட்ட அகழாய்வு நடைபெற்று வருகிறது. கீழடியின் பெருமையை பறைசாற்றும் வகையில், இந்தப் பகுதியைச் சேர்ந்த பலர் தங்களது பங்களிப்பையும் அளிக்கும் நோக்கில், தங்களது நிலங்களை திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்க வழங்கினர். அவர்களைப் பாராட்டி 16 நில உரிமையாளர்களுக்கு மொத்தம் ரூ.7.44 கோடிக்கான ஆணைகள் வழங்கப்பட்டன என்று அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் தெரிவித்தனர்.*

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; நாட்டின் பொறுப்பான சமூகம், இந்து சமூகம்தான் – என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் கூறியிருக்கிறாரே ?

**சிந்துமணி : ஆமாண்டி அந்து; இந்து சமூகம்தான் பொறுப்பான சமூகம் என்றால்; இஸ்லாமிய சமூகம், சீக்கிய சமூகம், ஜைன சமூகம், பௌத்த சமூகம் – போன்ற ஏனைய இந்திய சமூகங்கள் அனைத்தும் 'பொறுப்பற்ற' சமூகங்கள் என்றுதானே அர்த்தம் ஆகிறது !**

**'காவிக்கலர்' மட்டும்தான் பிடிக்கும் என்றால், ஏனைய மற்ற கலர்கள் அதாவது வண்ணங்கள் அனைத்தும் பிடிக்காதவை, வெறுப்பவை என்றுதானே பொருள் !**